226



226
3-60

# சுதேசவாசகம்

இரண்டாம் புத்தகம்






TB.
031(2)
N60
36569

# சுதேச வாசகம்

## இரண்டாம் புத்தகம்

[1957ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள, இணைக்கப்பெற்ற ஆரம்பக்கல்விப் பாடத் திட்டப்படி எழுதப்பெற்றது]


வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
**வி. சூ. சுவாமிநாதன் அவர்களும்**
சென்னை, சர். எம். சிடி. முத்தையாச் செட்டியார்
உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
**வித்துவான், பி. எஸ். சண்முகம் பிள்ளை அவர்களும்**
தொகுத்தது.



**வி. சூ. சுவாமிநாதன்**
பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, மதுரை | சுங்குராம செட்டி தெரு, சென்னை 1



பதிப்புரிமை]



[விலை—ந. பை. 44

முதல் பதிப்பு—1958
எட்டாம் பதிப்பு—1960

TB
031(2)
N60

86569

பாரதி பிரஸ், மதுரை :—'60

# முகவுரை

1957ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்டுள்ள, இணைக்கப் பெற்ற ஆரம்பக் கல்வி தமிழ்ப் பாடத் திட்டப்படி இரண்டாம் வகுப்புக்கென இப் புத்தகம் எழுதப் பெற்றுள்ளது.

முதல் வகுப்புப் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயர்ந்த நடை, புதுச் சொற்கள் முதலியன இதில் படிப்படியாகப் புகுத்தப் பெற்றுள்ளன. எளிய கட்டுக் கதைகள், பிராணிக் கதைகள், எளிய விஷயங்களைப் பற்றிய உரையாடல்கள், புலவர்களின் வாழ்க்கைப் பகுதிகள், பள்ளியிலும் வீட்டிலும் மாணவர்களின் வேலைகள்—இத்தகைய உரை நடைப் பாடங்கள் இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

நாய்ப் பாட்டு, முரசுப் பாட்டு, கிளிப் பாட்டு, வெண்ணிலாப் பாட்டு முதலிய எளிய பாடல்களும், உலகநீதி, கொன்றை வேந்தன் ஆகிய நீதிச் செய்யுள்களும் தேவையான அளவில் சேர்க்கப்பெற்றுள்ளன.

உரை நடைப் பாடங்களிலும் எல்லாச் செய்யுட் பாடங்களிலும் வரும் புதுச் சொற்கள், பாடத் திட்டத்தில் கண்டபடி சுமார் 500 உள்ளன. இச் சொற்களைப் பொருள் தெரிந்து உபயோகிக்குமாறு செய்யும் பயிற்சிகளும் கற்றவற்றை மனத்திற் பதிய வைக்கத் தக்க வினாக்களும் ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப் பெற்றுள்ளன. இத்தகைய வினாக்களையும் மொழிப் பயிற்சிகளையும் ஆசிரியர்கள் தாமே மேலும் சில தயாரித்துப் பயன்படுத்தலாம்.

தொகுத்தோர்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நமது கொடி | .... | 7 |
| 2 | திசைகள் | .... | 9 |
| 3 | உடல் நல வழி | .... | 10 |
| 4 | நாள், வாரம், மாதம் | .... | 12 |
| 5 | உரையாடல் | .... | 14 |
| 6 | நல்ல பழக்கம் | .... | 16 |
| 7 | படப் பயிற்சி—1 | .... | 17 |
| 8 | பிராணிகளின் ஒலிகள் | .... | 18 |
| 9 | எழுத்துக்களின் ஒலி வேறுபாடு | .... | 19 |
| 10 | இரட்டைச் சொற்கள் | .... | 21 |
| 11 | படப் பயிற்சி—2 | .... | 23 |
| 12 | பூனை | .... | 24 |
| 13 | முரசுப் பாட்டு | .... | 25 |
| 14 | நாய் | .... | 26 |
| 15 | வீட்டு வாசல் காப்பவன் | .... | 28 |
| 16 | தென்னை மரம் | .... | 29 |
| 17 | பள்ளி விளையாட்டுக்கள் | .... | 31 |
| 18 | வண்டிகள் | .... | 33 |
| 19 | வௌவால் | .... | 35 |
| 20 | கிளி | .... | 37 |
| 21 | குருவிக் கூடு | .... | 38 |
| 22 | ஓநாயும் ஆட்டுக்குட்டியும் | .... | 40 |
| 23 | தபால்காரர் | .... | 43 |
| 24 | படப் பயிற்சி—3 | .... | 46 |
| 25 | அறிவுள்ள காகம் | .... | 47 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 26 | பள்ளிக்கூடத் தோட்டம் | .... | 48 |
| 27 | வெண்ணிலா | .... | 51 |
| 28 | சுத்தம் சோறு போடும் | .... | 53 |
| 29 | பாரதியாரின் நூலார்வம் | .... | 56 |
| 30 | புருவும் எறும்பும் | .... | 58 |
| 31 | கிராம அதிகாரிகள் | .... | 60 |
| 32 | வேடிக்கைப் பாடல்கள் | .... | 64 |
| 33 | ஔவையார் | .... | 65 |
| 34 | நான்கு திருடர்கள் | .... | 67 |
| 35 | உலகநீதி | .... | 70 |
| 36 | கொன்றைவேந்தன் | .... | 71 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா,
விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா,
தவசுப நாமே ஜாகே,
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய, ஜய ஹே!

—ரவீந்திரநாத தாகூர்.

---

# பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

---

Correct Version used. Vide R. C. No. 33/TBC/56 dated 12-7-'56.



## 1. நமது கொடி

இந்தப் படத்தைப் பார்.

இது நமது நாட்டின் கொடி.

இதை மூவர்ணக் கொடி என்று சொல்லுகிறோம்.

மேலே இருப்பது சிவப்பு நிறப் பட்டை ; இடையே வெள்ளை ; கீழே பச்சை.

வெள்ளை நிறப் பட்டையின் நடுவில் ஒரு சக்கரம் உள்ளது.

அந்தச் சக்கரத்திற்கு அசோக சக்கரம் என்று பெயர்.

அது அசோக மன்னருடைய அறநெறி தவருத ஆட்சியின் சின்னமாக இருந்தது.

இப்பொழுது நம் சுதந்திர இந்தியாவின் சின்னமாக விளங்குகிறது.

சுதந்திர நாள் போன்ற தேசீய விழா நாளில் நாம் நமது கொடியை ஏற்றிவைத்து வணங்கவேண்டும்.

நமது கொடிக்கு நாம் எப்பொழுதும் மரியாதை செலுத்தவேண்டும்.

புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆட்சி | அறநெறி | சின்னம் | நாள் |
| மன்னர் | தவருத | விளங்கு | பட்டை |
| மூவர்ணம் | ஏற்றி | சக்கரம் | பச்சை |
| சுதந்திர | செலுத்த | வணங்க | மரியாதை |
| வெள்ளை | கீழே | மேலே | தேசீயவிழா |
| நாட்டின் | நடுவில் | வேண்டும் | இப்பொழுது |
| எப்பொழுதும் | போன்ற | | |

பயிற்சி

1. நமது கொடியிலுள்ள நிறப்பட்டைகள் எப்படி அமைந்துள்ளன ?
2. நடுவிலுள்ள சக்கரத்திற்கு என்ன பெயர் ? ஏன் அப்பெயர் வந்தது ?
3. நாம் எப்பொழுது கொடியை ஏற்றிவைத்து வணங்க வேண்டும் ?

# 2. திசைகள்




காலையில் சூரியன் கிழக்கே தோன்றும்.
நீ கிழக்கே பார்த்து நில்.
இப்பொழுது உன் முன் பக்கம் கிழக்கு.
உன் பின் பக்கம் மேற்கு.
உன் கைகளைப் பக்கங்களில் நீட்டு.
உன் வலக்கைப் பக்கம் தெற்கு.
உன் இடக்கைப் பக்கம் வடக்கு.
மாலையில் சூரியன் மேற்கில் மறையும்.
மொத்தம் நான்கு திசைகள் உண்டு.
அவைகளின் பெயர்களைச் சொல்லு.
கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு எனத்
திசைகள் நான்கு.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கிழக்கு | முன் | வலக்கை | மொத்தம் |
| மேற்கு | பின் | இடக்கை | திசைகள் |
| சூரியன் | வடக்கு | மறையும் | தோன்றும் |
| பக்கங்கள் | தெற்கு | | |

### பயிற்சி

1. நான்கு திசைகளின் பெயர்கள் என்ன?
2. உன் வீட்டுக்கு எந்தத் திசையில் உன் பள்ளிக்கூடம் இருக்கிறது?
3. உன் ஊரிலுள்ள கோவில் பள்ளிக்கூடத்திற்கு எந்தத் திசையில் இருக்கிறது?

---

## 3. உடல் நல வழி

1. காலையில் துயில் எழு.
2. கடவுளை வழிபடு.
3. பற்களை நன்றாய்த் துலக்கு.
4. அழுக்குத் தேய்த்துக் குளி.
5. ஆடையைத் துவைத்துக் கட்டு.
6. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
7. கூழானாலும் குளித்துக் குடி.
8. நன்றாக மென்று உண்.
9. மீதூண் விரும்பேல்.

# 10. பசித்துப் புசி.

# 11. மாலையில் உலாவு.

# 12. வியர்க்க விளையாடு.

# 13. கண்ட இடத்தில் துப்பாதே.

# 14. நகத்தைக் கடிக்காதே.

# 15. சுத்தம் சோறு போடும்.

## புதுச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| துயில் | துவை | கூழ் | மென்று | துப்பு |
| வழிபடு | தேய் | கசக்கு | மீதூண் | கடவுள் |
| துலக்கு | அழுக்கு | கந்தை | உலாவு | வியர்க்க |
| குளி | கட்டு | கண்ட | சுத்தம் | கடி |
| விரும்பேல் | பசித்து | | | |

## பயிற்சி

1. விடை எழுது :—

   1. காலையில் எழுந்ததும் என்ன செய்யவேண்டும் ?
   2. எப்படிக் குளிக்கவேண்டும் ?
   3. எப்பொழுது புசிக்கவேண்டும் ?

2. பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| நகத்தை | குளித்துக் குடி. |
| மாலையில் | துப்பாதே. |
| கூழானாலும் | கடிக்காதே. |
| கண்ட இடத்தில் | உலாவு. |

## 4. நாள், வாரம், மாதம்

சூரியன் தோன்றுவது முதல் சூரியன் மறையும் வரை பகல்.

சூரியன் மறைவது முதல் தோன்றுவது வரை இரவு.

ஒரு பகலும் ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.

ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.

வாரத்தின் நாட்களைக் கிழமைகள் என்பார்கள்.

ஏழு கிழமைகளுக்கும் பெயர்கள் உண்டு.

அவை: ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

முப்பது நாட்கள் கொண்ட காலம் ஒரு மாதம்.

ஒரு மாதத்தின் நாட்களுக்குத் தேதிகள் என்று பெயர்.

பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலம் ஒரு வருடம் அல்லது ஓர் ஆண்டு எனப்படும்.

ஒரு வருடத்தின் பன்னிரண்டு மாதங்களுக்கு நம் முன்னோர் வைத்த பெயர்களாவன:

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

இவை தமிழ் மாதங்கள் என்று சொல்லப்படும்.

ஆங்கில மாதங்கள் பன்னிரண்டு உள்ளன. அவை வருமாறு:

ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்பிரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| காலம் | மாதம் | ஆங்கில | வருமாறு |
| வாரம் | தேதி | வைத்த | பன்னிரண்டு |
| கிழமை | ஆண்டு | முன்னோர் | கொண்டது |

### பயிற்சி

1. தமிழ் மாதங்களின் பெயர்களை வரிசையாகச் சொல்லு.
2. ஜூன் மாதத்துக்கு முன் மாதம் எது? பின் மாதம் எது?
3. இன்றைக்கு உரிய தமிழ் மாதம், தேதி, ஆங்கில மாதம், தேதி ஆகியவற்றைத் தெரிந்துகொள்.

## 5. உரையாடல்

தந்தை: வேலா, இன்று என்ன கிழமை?
வேலன்: இன்று ஞாயிற்றுக் கிழமை.
தந்: இன்று பள்ளிக்கூடம் உண்டா?
வே: இன்று பள்ளிக்கூடம் இல்லை.
தந்: நேற்று என்ன கிழமை?
வே: நேற்று சனிக் கிழமை.
தந்: நீ நேற்று பள்ளிக்கூடம் போனாயா?
வே: நான் நேற்று பள்ளிக்கூடம் போனேன்.
தந்: நாளை என்ன கிழமை?
வே: நாளை திங்கட் கிழமை.
தந்: நீ நாளை பள்ளிக்கூடம் போவாயா?
வே: நான் நாளை பள்ளிக்கூடம் போவேன்.
தந்: இப்பொழுது நீ என்ன செய்கிறாய்?
வே: இப்பொழுது நான் எழுதுகிறேன்.
தந்: இன்று காலையில் என்ன செய்தாய்?
வே: இன்று காலையில் பாடம் படித்தேன்.
தந்: இன்று மாலையில் என்ன செய்வாய்?
வே: இன்று மாலையில் விளையாடுவேன்.

## புதுச் சொற்கள்

இன்று நாளை நேற்று

## பயிற்சி

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்துப் படி :—

1. நான் இப்பொழுது வருகிறேன்.
2. நாங்கள் ______ ______.
3. நீ ______ ______.
4. நீங்கள் ______ ______.
5. அவன் ______ ______.
6. அவள் ______ ______.
7. அவர்கள் ______ ______.
8. அது ______ ______.
9. அவை ______ ______.

1. நான் நேற்று வந்தேன்.
2. நாங்கள் ______ ______.
3. நீ ______ ______.
4. நீங்கள் ______ ______.
5. அவன் ______ ______.
6. அவள் ______ ______.
7. அவர்கள் ______ ______.
8. அது ______ ______.
9. அவை ______ ______.

1. நான் நாளை வருவேன்.
2. நாங்கள் ______ ______.
3. நீ ______ ______.
4. நீங்கள் ______ ______.
5. அவன் ______ ______.
6. அவள் ______ ______.
7. அவர்கள் ______ ______.
8. அது ______ ______.
9. அவை ______ ______.

## 6. நல்ல பழக்கம்

(பாட்டு)

என் அருமைக் குழந்தாய்
இன்று காலை எழுந்தாய்
சொன்ன சொல்லைக் கடவாய்
சுறு சுறுப்பாய் நடப்பாய். 1

காலையிலே எழுவாய்
கடவுளைத் தொழுவாய்
வேலைகளில் முயல்வாய்
விருப்புடன் பயில்வாய். 2

அன்னை தந்தை வணங்கு
அவர் சொல்லுக் கிணங்கு
நன்னயமாய்ப் பழகு
நல் வழியில் ஒழுகு. 3

பள்ளிக்கூடம் போக
பரபரப் பாக
உள்ள மகிழ்வோடு
உற்சாகமாய் ஓடு. 4

நல்ல பிள்ளையோடு
நாளும் நீயே கூடி
நல்லவனாய்ச் சேராய்
நன்மையுண்டு பாராய். 5

—ஸா. கனகராஜ ஐயர்.

# 7. படப் பயிற்சி—1

## அஞ்சாத முருகன்



முருகனும் அவன் தங்கையும் தெருவில் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாய் அவர்களைக் கடிக்க ஓடிவந்தது. முருகனுடைய தங்கை பயந்து அழுதாள். முருகன் தன் தங்கையை எப்படிக் காப்பாற்றினான் ?

படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லுங்கள்.

# 8. பிராணிகளின் ஒலிகள்



| | |
|---|---|
| மயில் | அகவுகிறது. |
| கோழி | கூவுகிறது. |
| காக்கை | கரைகிறது. |
| குயில் | கூவுகிறது. |
| ஆந்தை | அலறுகிறது. |
| பூனை | சீறுகிறது. |
| நாய் | குரைக்கிறது. |
| நரி | ஊளையிடுகிறது. |
| ஆடு | கத்துகிறது. |
| பசு | கதறுகிறது. |
| குதிரை | கனைக்கிறது. |
| கழுதை | கத்துகிறது. |
| பன்றி | உறுமுகிறது. |
| யானை | பிளிறுகிறது. |
| புலி | உறுமுகிறது. |
| சிங்கம் | கர்ச்சிக்கிறது. |

புதுச் சொற்கள்

| | | |
|---|---|---|
| சிங்கம் | பிளிறுகிறது | புலி |
| சீறுகிறது | கனைக்கிறது | நரி |
| அலறுகிறது | உறுமுகிறது | குயில் |
| கத்துகிறது | கதறுகிறது | ஆந்தை |
| அகவுகிறது | ஊளையிடுகிறது | கர்ச்சிக்கிறது |

பயிற்சி

பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| ஆந்தை | கரைகிறது |
| பசு | கர்ச்சிக்கிறது |
| சிங்கம் | அகவுகிறது |
| யானை | அலறுகிறது |
| காக்கை | கதறுகிறது |
| மயில் | பிளிறுகிறது |

---

# 9. எழுத்துக்களின் ஒலி வேறுபாடு

[ஆசிரியர்க்கு: கண், தங்கம், மகன் ஆகிய சொற்களில் 'க' என்ற எழுத்தின் ஒலி வேறுபடுவதை மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படி நன்கு சொல்லிக் காட்டவும். பிற எழுத்துக்களுக்கும் இவ்வாறே.]

| | | |
|---|---|---|
| **கண்** | **தங்கம்** | **மகன்** |
| **தச்சர்** | **மஞ்சள்** | **சரம்** |
| **சட்டம்** | **கடவுள்** | ——— |
| **தலை** | **பந்தம்** | ——— |
| **பணம்** | **கம்பம்** | ——— |

**கல் மிகவும் கனமானது.**
**தச்சர் ஊஞ்சல் செய்கிறார்.**
**படத்தின் சட்டம் பார்.**
**இது தட்டார் செய்த நகை.**
**பலமாய் பறை அடி.**
**பையன் பம்பரம் ஆடுகிறான்.**
**தனி வழி போவது பயம்.**
**பட்டுப் புடவை நீல நிறம்.**
**மஞ்சள் நிறம் பூசு.**
**தங்கம் அதிக விலை உள்ளது.**
**சுக்கும் மிளகும் வாங்கு.**
**காலையில் எழுந்ததும் கடவுளைத் தொழு.**

### புதுச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| நீலம் | கனம் | பூசு | பயம் | தொழு |
| பந்தம் | நகை | விலை | பறை | பலமாய் |
| பணம் | மஞ்சள் | புடவை | கம்பம் | உள்ளது |

### பயிற்சி

1. பின்வரும் சொற்களில் ஒரே மாதிரியான ஓசையுடைய 'க' 'ச' எழுத்துக்கள் உள்ள வார்த்தைகளைப் பிரித்துப் படி :—

   தகரம், தங்கம், கறுப்பு, மகன், சுகம், கல்வி, கரி, சலம், மச்சம், பஞ்சம், வஞ்சம், சரி, அச்சம்.

2. ஓசை வேறுபாடு தெரியும்படி படித்துக் காட்டு :—
   1. படம் மாட்டினான்.
   2. பண்டம் வைக்க இடம் எங்கே ?
   3. அந்தக் கத்தி தம்பிக்குச் சொந்தம்.
   4. பச்சை மஞ்சள் பூசினாள்.

# 10. இரட்டைச் சொற்கள்



வாழைப்பழம் சீப்புச் சீப்பாய் இருக்கிறது.

காய்கள் குலை குலையாய்க் காய்க்கின்றன.

மனிதர் கூட்டம் கூட்டமாய் நிற்கிறார்கள்.

ஆடுகள் மந்தை மந்தையாய் மேய்கின்றன.

எறும்புகள் சாரை சாரையாய் ஊருகின்றன.

பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூக்கின்றன.

செடிகளை வரிசை வரிசையாய் நடுகிறார்கள்.

புத்தகங்கள் அடுக்கு அடுக்காய் இருக்கின்றன.

வைக்கோலைப் போர் போராய்ப் போடுகிறார்கள்.

இளநீரை மடமட வென்று குடித்தான்.

தங்கம் பளபளப்பாய் இருக்கும்.

அவன் கலகல வென்று நகைத்தான்.

## புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| சாரை | போர் | குலை | நடுகிருர்கள் |
| இளநீர் | வரிசை | பளபள | நகைத்தான் |
| கூட்டம் | அடுக்கு | கலகல | வைக்கோல் |
| இரட்டை | கொத்து | மடமட | மேய்கின்றன |
| | | | ஊருகின்றன |

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் சரியான இரட்டைச் சொற்களை அமைத்துப் படி :—

காய்கள் ——— காய்க்கின்றன.
வாழைகளை ——— நடுகிருர்கள்.
மாடுகள் ——— மேய்கின்றன.
வேலன் ——— சிரித்தான்.

2. கீழே கொடுத்திருக்கும் இரட்டைச் சொற்களைச் சரியான இடத்தில் அமைத்துப் படி :—

(குபுகுபு வென்று, மளமள வென்று, சலசல வென்று.)
ஓடை நீர் ——— ஓடுகிறது.
ஆசிரியர் ——— பேசுகிருர்.
ஊற்றிலிருந்து ——— நீர் வருகிறது.

# 11. படப் பயிற்சி—2



ஒவ்வொரு படத்தைப் பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது.

# 12. பூனை



பூனை வீட்டில் வளரும் பிராணி. பூனையில் பல நிறங்கள் உண்டு.

பூனை பகலில் படுத்துத் தூங்கும். அது இரவில் இரை தேடும். இரவில் அதற்குக் கண் நன்ருய்த் தெரியும். பூனை எலி பிடிக்கும்.

பூனையின் கால்களின் அடியில் மெதுவான சதைத் திண்டுகள் உண்டு. அது நடக்கும் போது ஓசை உண்டாவதில்லை. அதன் நகங்கள் கூர்மையானவை. பெரும்பாலும் அது நகங்களை உள்ளே இழுத்துக்கொண்டிருக்கும். வேண்டும்போது அது நகங்களை வெளியே நீட்டிக்கொள்ளும். எலியைக் கண்டதும் நகங்களை நீட்டிக்கொண்டு அதன் மேல் பாயும்.

பால், தயிர், வெண்ணெய், நெய், இறைச்சி, சோறு முதலியவைகளைப் பூனை தின்னும். எலிகளையும் சிறு பறவைகளையும் பிடித்துத் தின்னும். நாயைக் கண்டால் பயந்து ஓடும்.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| பிராணி | இழுத்து | ஓசை | பாயும் |
| நன்ருய் | படுத்து | தின்னும் | இறைச்சி |
| சதைத்திண்டு | பெரும்பாலும் | வெண்ணெய் | மெதுவான |

### பயிற்சி

1. **விடை எழுது** :—
   1. பூனைக்குக் கால்களின் அடியில் என்ன இருக்கின்றன ?
   2. பூனை நடக்கும்போது ஏன் ஓசை உண்டாவதில்லை ?
   3. பூனை எவற்றைத் தின்னும் ?
2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—
   1. பூனைக்கு ——— கண் நன்ருகத் தெரியும்.
   2. பூனை ——— பிடிக்கும்.
   3. பூனை எலி பிடிக்கும்பொழுது தன் நகங்களை ——— அதன் மேல் பாயும்.

---

## 13. முரசுப் பாட்டு

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்.
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொரு நிறமாகும் ;

சாம்பல் நிறம் ஒரு குட்டி—கருஞ்
சாந்து நிறம் ஒரு குட்டி.
பாம்பு நிறம் ஒரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறம் ஒரு குட்டி.

எந்த நிறம் இருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரம் அன்றோ?
இந்த நிறம் சிறி தென்றும்—இஃது
ஏற்றம் என்றும் சொல்ல லாமோ?

ஒன்றென்று கொட்டுமுரசே!—அன்பில்
ஓங்கென்று கொட்டுமுரசே!
நன்றென்று கொட்டுமுரசே!—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

—பாரதியார்.

## 14. நாய்



இது ஒரு நாயின் படம். நாய் வீட்டில் வளரும் பிராணி. நாயில் பல வகைகள் உண்டு. நாயில் பல நிறங்களும் உண்டு.

தன்னை வளர்ப்பவரிடம் நாய் அன்பாய் இருக்கும். வீட்டைக் காவல்செய்யும். நாய்க்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் வாலை ஆட்டும். கோபம் வந்தால் பல்லைக் காட்டி உறுமும். அந்நியரைக் கண்டால் குரைக்கும்.

நாய் தூரத்தில் உள்ள பொருள்களையும் வாசனையால் அறிந்துகொள்ளும். இதை மோப்பம் பிடித்தல் என்று சொல்லுகிறோம்.

நாய் விரைவாய் ஓடும். சில நாய்கள் தண்ணீரில் நன்ருய் நீந்தும். நாய்கள் மனிதருக்குப் பல உதவிகள் செய்கின்றன. பால், சோறு, இறைச்சி முதலியவற்றை நாய் தின்னும். எலும்பைக் கடிக்க இதற்கு மிகுந்த விருப்பம் உண்டு. இது நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டே ஓடும். நாய் மிகவும் நன்றியுள்ள பிராணி.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| உதவி | எலும்பு | மிகுந்த | வகை |
| விரைவாய் | தூரம் | கோபம் | நன்றி |
| தொங்க | வாசனை | அறிந்து | காவல் |
| மோப்பம் | மகிழ்ச்சி | மிகவும் | அந்நியர் |

### பயிற்சி

1. விடை எழுது :—
   1. மகிழ்ச்சி ஏற்பட்டால் நாய் என்ன செய்யும் ?
   2. கோபம் வந்தால் நாய் என்ன செய்யும் ?
   3. நாய் எவற்றை விரும்பித் தின்னும் ?
2. கீழ்வரும் எழுத்துக்களைச் சரியானபடி மாற்றி எழுதிச் சொற்களாக்கு :—

   ணிபிரா; ல்வகா; பம்ப்மோ;
   லும்எபு; ருப்பவிம்; னைசவா.

# 15. வீட்டு வாசல் காப்பவன்



வீட்டு வாசல் காப்பவன்
வேட்டையாட வல்லவன்
ஆட்டுக்கிடைப் பாண்டியன்
அன்புமிக்க தோழன். 1

உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்
மண்டலத்தில் நாய் போல்
வாய்த்த துணே உண்டோ? 2

—தேசிக விநாயகம் பிள்ளே.

அருஞ்சொற்பொருள்

வல்லவன் - பலமுள்ளவன். பாண்டியன் - தலைவன். துணிபவன் - மனவுறுதி உள்ளவன். மண்டலம் - பூமி.



# 16. தென்னை மரம்



இதோ பார் தென்னை மரம். இது செங்குத்தாய் மிகவும் உயரமாக வளரும். இதற்குக் கிளைகள் இல்லை; ஆனால் இலைகள் உண்டு. தென்னை இலையைத் தென்னைமட்டை என்பார்கள். தென்னைமட்டைகள் அடுப்பு எரிக்க உதவும். ஒவ்வொரு மட்டையிலும் நூற்றுக்கணக்கான ஓலைகள் இருக்கும். ஓலைகளால் கீற்றுகள் பின்னலாம். கீற்றுகள் கூரை வேயவும் பந்தல் போடவும் உதவும்.

தென்னை மரத்தில் தேங்காய்கள் குலை குலையாய்க் காய்க்கும். இளந்தேங்காய் இளநீர் எனப்படும். வெயில் காலத்தில் இளநீர் குடித்தால் மிக்க சுவையாய் இருக்கும்; தாகம் தீரும்.

முற்றின காய் நெற்று எனப்படும். நெற்றிலிருந்து கிடைக்கும் நாரைக்கொண்டு கயிறு

பின்னலாம். இந்தக் கயிறு வலிமையானது. கிணற்றிலிருந்து நீர் இறைக்க உதவும் தாம்புக் கயிறு தேங்காய் நாரினுல் ஆனது.

தேங்காயினுள் இருக்கும் பருப்பு சிறிது இனிப்பாயிருக்கும். இதைப் பல தின்பண்டங்களில் சேர்த்து உண்ணலாம். தேங்காய் ஒரு நல்ல உணவு.

முற்றி உலர்ந்த தேங்காய்ப் பருப்பு கொப்பரை எனப்படும். இதைச் செக்கில்போட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கலாம். தேங்காய் எண்ணெயை உபயோகித்துப் பல தின்பண்டங்கள் செய்யலாம். சோப்பு செய்வதற்கும் இந்த எண்ணெய் உதவுகிறது.

### புதுச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| செக்கு | நார் | வேயவும் | மிக்க | கொப்பரை |
| சுவை | கீற்று | இனிப்பு | முற்றின | எண்ணெய் |
| கூரை | தாகம் | பருப்பு | பந்தல் | செங்குத்தாய் |
| நெற்று | தீரும் | சோப்பு | வலிமை | தின்பண்டம் |
| ஓலைகள் | தாம்பு | இறைக்க | | |

### பயிற்சி

1. விடை எழுது :—
   1. தென்னை இலைக்கு என்ன பெயர்?
   2. இளந் தேங்காயின் பெயர் என்ன?
   3. தென்னை ஓலைகள் எதற்கு உதவும்?
   4. தாம்புக் கயிறு எதிலிருந்து செய்யப்படுகிறது?
   5. தேங்காயின் பருப்பு எப்படி உதவுகிறது?

2. பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

| | | |
|---|---|---|
| இளந்தேங்காய் | —— | எண்ணெய் |
| ஓலை | —— | கயிறு |
| தேங்காய் நார் | —— | இளநீர் |
| கொப்பரை | —— | கீற்று |

# 17. பள்ளி விளையாட்டுக்கள்

(உரையாடல்)



சேகர் :—கமலா! இங்கே, வா. இந்தத் துலாப் பலகையில் விளையாடுவோம்.

கமலா :—எனக்குப் பயமாயிருக்கிறது. விழுந்து விடுவேன் போலிருக்கிறது.

சேகர் :—விழமாட்டாய். பலகையை நன்ருகப் பிடித்துக் கொள்.

கமலா :—சேகர்! விரைவாக ஆட்டுகிருயே! சற்று மெல்ல ஆட்டு.

சேகர் :—மெல்லத்தான் ஆட்டுகிறேன். நீ பயப் படாமலிரு. சற்றுப் பின்னே விலகி உட்கார்.

கமலா :—இதில் ஆடினது போதும். சறுக்குப் பலகையில் சறுக்குவோம், வா.

சேகர் :—நீ முதலில் சறுக்கு. நான் உன்னைப் பிடிக்க வருகிறேன்.

கமலா :—இதில் எனக்குப் பழக்கம் அதிகம். உன்னுல் என்னைப் பிடிக்கமுடியாது.

சேகர் :—நீ 'விர்' என்று சறுக்குகிருயே! உன்னைப் பிடிப்பது முடியாதுதான்.

கமலா :— நாள்தோறும் ஒரு மணி நேரமாவது விளையாட வேண்டும் என்று ஆசிரியர் ஏன் கட்டாயப் படுத்துகிருர் ?

சேகர் :— விளையாடுவதனுல் நம் உடல் வலிமை பெறும். விளையாடிவிட்டு வீட்டுக்குப் போனுல் நன்ருகப் பசி எடுக்கும். நோய் ஏதும் நம்மை அணுகாது.

கமலா :— அப்படியானுல் நாம் நாள் தவருமல் விளையாடுவோம்.

### புதுச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| போல் | ஏதும் | விழுந்து | சற்று | அணுகாது |
| மெல்ல | விலகி | பழக்கம் | முடியாது | நாள்தோறும் |
| துலா | அதிகம் | சறுக்கு | கட்டாய | |

### பயிற்சி

1. படத்தில் பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுக்கள் என்ன ?
2. உனக்குத் தெரிந்த வேறு விளையாட்டுக்களில் மூன்று சொல்லு.

# 18. வண்டிகள்



இது ஒரு கை வண்டி. இதை மனிதன் இழுக்கிறான். இதில் சாமான் மூட்டைகளை ஏற்றுவார்கள்.



இது ஒரு மாட்டு வண்டி. வண்டியை மாடு இழுக்கிறது. இதை ஒற்றை மாட்டு வண்டி என்று சொல்லுகிறோம். இந்த வண்டியில் மனிதர்கள் ஏறிப் போவார்கள். இதில் சாமான்களையும் ஏற்றலாம். இரண்டு மாடுகள் இழுக்கும் வண்டியும் உண்டு. அதை இரட்டை மாட்டு வண்டி என்று சொல்லுகிறோம்.



இது ஒரு குதிரை வண்டி. குதிரை வண்டி விரைவாகப் போகும். இதில் மனிதர் ஏறிச் செல்லுவார்கள்.



இது புகை வண்டி. இது இரும்புத் தண்டவாளங்களின் மேல் ஓடும். இது நீராவியால் ஓடுகிறது. இதில் பல பெட்டிகள் இணைக்கப்பட்டு இருக்கின்றன. பெட்டிகளை எஞ்சின் இழுக்கிறது. புகை வண்டி மிகவும் விரைவாகப் போகும்.



இது ஒரு மோட்டார் வண்டி. இது தரையில் ஓடும். இதற்கு நான்கு சக்கரங்கள் உண்டு. சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பர் போட்டிருக்கிறது. இதுவும் மிகவும் விரைவாய்ப் போகும்.



இது ஒரு சைக்கிள் வண்டி. இதற்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. இதில் ஒருவர் ஏறிச் செல்லலாம்.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| தரை | நீராவி | இணைக்க | தண்டவாளம் |
| ரப்பர் | சாமான் | எஞ்சின் | செல்லுவார் |

### பயிற்சி

1. விடை எழுது :—
   1. எது விரைவாகப் போகும்—குதிரை வண்டியா, மாட்டு வண்டியா ?
   2. மோட்டார் வண்டிச் சக்கரங்களைச் சுற்றி என்ன இருக்கிறது ?
   3. புகைவண்டி எதன் சக்தியால் ஓடுகிறது ?
2. பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| புகைவண்டி | குதிரையால் இழுக்கப்படும். |
| மாட்டு வண்டி | ரப்பர்ச் சக்கரம் உடையது. |
| மோட்டார் வண்டி | மாடுகளால் இழுக்கப்படும். |
| குதிரை வண்டி | தண்டவாளங்களின்மேல் செல்லும். |

# 19. வெளவால்



இது ஒரு வெளவால். வெளவால் பறக்கும் பிராணி. இதன் முகம் எலியின் முகத்தைப் போல் இருக்கும். இதன் உடம்பில் மெல்லிய உரோமங்கள் உண்டு. இது விலங்குகளைப் போல் குட்டி போட்டுப் பால் கொடுக்கும். விலங்குகளுக்கு இருப்பதுபோல் இதன் வாயில் பற்கள் இருக்கும். ஆகையால் இது பறவை அல்ல.

வெளவாலுக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. இவைகள் பறவைகளுக்கு இருப்பது போல் பல இறகுகளாக இல்லை; மெல்லிய தோலால் அமைந்திருக்கும். இந்த இறக்கையின் நடுவில், மெல்லிய குடைக் கம்பிகள் போன்ற எலும்புகள் உண்டு. அவைகளின் உதவியால் வெளவால் தன் இறக்கைகளைக் குடைபோல் சுருக்கவும் விரிக்கவும் முடியும்.

வெளவாலின் கால்கள் மெலிந்து குட்டையாய் இருக்கும். கால்களில் நீண்டு வளர்ந்த நகங்கள் உண்டு. இந்த நகங்களின் உதவியால் வெளவால் தலைகீழாகத் தொங்கும். நிற்கவும் நடக்கவும் அதனால் முடியாது. வெளவால் பண்டங்களின் வாசனையை நன்றாய் அறியும்.

காதுகள் நீளமாக இருப்பதனுல் இது சிறு ஒலியையும் கேட்கும்.

வௌவால் பகலில் மரங்களிலும் வீட்டுக் கூரைகளிலும் கோவில்களிலும் இருட்டான இடங்களிலும் தொங்கிக்கொண்டு இருக்கும். இரவில் இரை தேடச் செல்லும்.

வௌவால்களில் வீட்டு வௌவால், பழம் தின்னி வௌவால் என இரண்டு வகை உண்டு. வீட்டு வௌவால் ஈ, கொசு முதலிய வைகளைத் தின்னும். ஆடு மாடுகள் தூங்கும் போது, அவைகளின் உடலில் தன் கூர்மை யான பற்களை அழுத்தி இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும். பழம் தின்னி வௌவால் மரங்களில் உள்ள பழங்களையே தின்று வாழும். இது வீட்டு வௌவாலைவிடப் பெரிதாயிருக்கும்.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| ஒலி | சுருக்கு | உடம்பு | முதலிய |
| தோல் | அழுத்தி | வாழும் | இரத்தம் |
| குடை | விலங்கு | உறிஞ்சி | அமைந்து |
| முகம் | கூர்மை | மெலிந்து | உரோமங்கள் |

### பயிற்சி

1. விடை எழுது :—
   1. வௌவாலை ஏன் பறவை என்று சொல்லக்கூடாது ?
   2. வௌவாலின் இறக்கைகள் எப்படி இருக்கும் ?
   3. வௌவால் எப்பொழுது இரை தேடச் செல்லும் ?
   4. வௌவாலின் உணவு என்ன ?
2. முதல் வரிசையிலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான சொல்லை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்து எழுது :—

| | |
|---|---|
| வௌவால் | பூச்சி |
| புரு | விலங்கு |
| சிலந்தி | பறவை |

# 20. கிளி



பச்சைக்கிளியே வா வா
பாலுஞ்சோறு முண்ணவா
கொச்சிமஞ்சள் பூசவா
கொஞ்சிவிளை யாடவா. 1

கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெழுந்து பொங்கவே
பவழவாய் திறந்துநீ
பாடுவாயோ தத்தம்மா. 2

பையப்பையப் பறந்துவா
பாடிப்பாடிக் களித்துவா
கையில்வந் திருக்கவா
கனியருந்த ஓடிவா. 3

—தேசிக விநாயகம் பிள்ளை.

# 21. குருவிக் கூடு

(உரையாடல்)



மணியன்: ராமா! இதோ பார். என் மேசையைச் சுத்தமாக வைத்துவிட்டுப் போனேன். இப்பொழுது ஒரே குப்பை!

ராமன்: வைக்கோலும் புல்லுமாக இருக்கிறதே!

மணியன்: யார் செய்திருப்பார்கள் இப்படி? என் தம்பியாகத் தானிருக்கும்.

ராமன்: அசடே, மேலே பார். அங்கே என்ன தெரிகிறது?

மணியன்: உத்திரக் கட்டையில் ஒரு பிடி வைக்கோல் இருக்கிறது. அருகே, இரண்டு குருவிகள் உட்கார்ந்திருக்கின்றன.

ராமன்: அவைதாம் இப்படிச் செய்திருக்கின்றன.

மணியன்: குருவிகள் அங்கே என்ன செய்கின்றன?

ராமன்: வைக்கோலும் புல்லும் கொண்டு அவை கூடு கட்டுகின்றன. அவற்றில் கொஞ்சம் மேசைமேல் விழுந்திருக்கின்றது.

மணியன்: வீட்டில் குருவி கூடு கட்டுமா?

ராமன்: சில குருவிகள் வீட்டில் கூடு கட்டும். இவை வீட்டுக் குருவிகள்.

மணியன்: கூட்டைப் பிரித்துப் போட்டு விடுவோமா?

ராமன்: வேண்டாம், மணியா. அவை இருந்துவிட்டுப் போகட்டும். நாம் மேசையை வேறிடத்தில் போட்டுக் கொள்ளலாம்.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| புல் | அசடு | பிரித்து | விடு |
| குப்பை | கொஞ்சம் | அருகே | உத்திரம் |

### பயிற்சி

1. நீ பார்த்திருக்கிற பறவைக் கூடுகளில் இரண்டு சொல்லு.
2. பறவைகள் ஏன் கூடு கட்டுகின்றன?

## 22. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

ஓர் அடர்ந்த காடு இருந்தது. அக்காட்டின் நடுவே ஆறு ஒன்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அப்போது வெயில்



காலம். ஆதலால், அக்காட்டிலுள்ள மிருகங்கள் ஆற்றில் தண்ணீர் குடிக்க வருவது வழக்கம்.

ஒரு நாள் இரைதேடி அலைந்த ஓநாய் ஒன்று அங்கு வந்து தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. அச்சமயம் அங்கு ஒரு ஆட்டுக்குட்டி தண்ணீர் குடிக்க வந்தது. அது ஓநாயைக் கண்டு பயந்து, கீழ்ப்பக்கத்தில் சென்று ஒரு ஓரத்தில் தண்ணீர் குடித்தது. ஓநாய் அதைக் கண்டதும், "இதோ! நமக்குச் சரியான உணவு கிடைத்துவிட்டது. இதை

எப்படியாவது கொன்று தின்னவேண்டும்," என்று தனக்குள் எண்ணியது.

பிறகு ஓநாய் சிறிது நேரம் தண்ணீர் குடித்துவிட்டு, ஆட்டுக்குட்டியைப் பார்த்து,

(பாட்டு)

"நான் குடிக்கும் நல்ல நீரை ஆட்டுக்குட்டியே—நீ ஏன்
நான்கு காலால் கலக்குகிறாய்? ஆட்டுக்குட்டியே!"

என்று கேட்டது. அதைக் கேட்ட ஆட்டுக் குட்டி மிகவும் பயந்து நடுங்கி,

(பாட்டு)

"ஐயையோ நான் என்னசெய்தேன் ஓநாய் ஐயாவே—இந்த
ஆற்று நீரைக் கலக்கவில்லை ஓநாய் ஐயாவே!
நீர் குடித்த மிச்சமன்றோ ஓநாய் ஐயாவே—நான்
நின்று கீழே குடிக்கின்றேன் ஓநாய் ஐயாவே!"

என்று கூறியது. ஆட்டுக்குட்டி சொல்லியது உண்மையாக இருந்தும், ஓநாய் அதை எப்படியாவது கொல்ல நினைத்து,

(பாட்டு)

"போன வருடத்தி லேன் ஆட்டுக்குட்டியே—என்னைப்
போக்கிரித்தனமாய் வைதாய் ஆட்டுக்குட்டியே?"

என்றது. அதைக் கேட்ட ஆட்டுக்குட்டி,

(பாட்டு)

"போன வருடத்தில் நான் ஓநாய் ஐயாவே—இந்தப்
பூமியில் பிறக்கவில்லை ஓநாய் ஐயாவே!
இரண்டே மாதம் நான் பிறந்து ஓநாய் ஐயாவே—உம்மை
எப்படி நான் வைதிருப்பேன் ஓநாய் ஐயாவே?"

என்று சொல்லியது. அதற்கு ஓநாய்,

(பாட்டு)

"உன் தாயே வைதிருக்கும் ஆட்டுக்குட்டியே—அதற்கு
உன்னைத்தானே கொன்றிடுவேன் ஆட்டுக்குட்டியே!"

என்று கூறி, ஆட்டுக்குட்டியை அறைந்து கொன்று தின்றது.

பொல்லாதவர் சிறிதும் பொருத்தமில்லாமல் நீதி பேசித் தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆகையால்,

தீயவரைக் கண்டால் தூர விலகு.

புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| நடுங்கி | அலைந்த | சரியான | தனக்குள் |
| கலக்கு | மிச்சம் | அன்றோ | எண்ணம் |
| போக்கிரி | வைதாய் | தீயவர் | பொருத்தம் |
| பொல்லாத | நீதி | ஓநாய் | நிறைவேற்றி |
| கொன்று | அறைந்து | உண்மை | |

பயிற்சி

1. விடை எழுது :—

   1. ஆட்டுக்குட்டியைக் கண்ட ஓநாய் என்ன நினைத்தது?
   2. "நீ ஏன் நீரைக் கலக்கினாய்?" என்று ஓநாய் கேட்டதற்கு ஆட்டுக்குட்டி என்ன சொல்லியது?
   3. "போன வருடத்தில் என்னை ஏன் வைதாய்?" என்று ஓநாய் கேட்டதற்கு ஆட்டுக்குட்டி என்ன கூறிற்று?

2. கீழேயுள்ள சொற்களில் கோடிட்ட இடங்களில் சரியான எழுத்துக்களை அமைத்து எழுது :—

   ஓ — ய்; ஆ — டுக்குட் —; இர — டு; எ — ணம்.

# 23. தபால்காரர்



கண்ணப்பன் :— அப்பா! அதோ போகிருரே, அவர் இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னுர். அவர் யார்?

தகப்பனுர் :— கண்ணப்பா! அவர் தபால்காரர். இது எனக்கு வந்த கடிதம். அதனுல் தான் என்னிடம் தரச் சொன்னுர்.

கண்ணப்பன் :— அப்பா! இது உங்களுக்கு வந்தது என்று அவர் எப்படித் தெரிந்து கொண்டார்?

தகப்பனுர் :— இதோ பார்! இதில் என்ன விலாசம் எழுதியிருக்கிறது என்று நீயே படி.

கண்ணப்பன் :— எங்கே பார்ப்போம். (படிக்கிருன்). ஏன் அப்பா! இது எங்கிருந்து வந்திருக்கிறது?

தகப்பனுர் :— இந்தக் கடிதம் சென்னைப் பட்டினத்திலிருந்து வந்திருக்கிறது. இதை உன் மாமா எழுதியிருக்கிருர்.

கண்ணப்பன் :— சென்னைப் பட்டினத்தில் இருந்து என்றைக்கு எழுதியிருப்பார் ?

தகப்பனுர் :— நேற்றுத்தான் எழுதியிருக்கிருர். இதோ பார் ! தேதி போட்டிருக்கிறது.

கண்ணப்பன் :— அப்பா ! இந்த மாதிரி இவர் கடிதம் கொண்டுவந்து கொடுப்பதற்கு இவருக்கு நாம் கூலி கொடுக்கவேண்டாமா ?

தகப்பனுர் :— நாம் இவரிடம் கூலி கொடுக்க வேண்டியதில்லை. தபால் ஆபீசில் பணம் கொடுத்து கார்டு, கவர், தபால்தலை முதலியவைகளை வாங்குகிருேம் அல்லவா ? அதிலிருந்து இவருக்கு மாதச் சம்பளம் கொடுப்பார்கள்.

கண்ணப்பன் :— இந்த ஊர் முழுவதும் இவர் கடிதம் கொடுக்க வேண்டுமே ! அப்படியானுல் இவருக்கு வேலை மிகவும் அதிகம் அல்லவா ?

தகப்பனுர் :— இந்த ஊருக்கு இவரைப் போல் தபால்காரர்கள் பலர் உண்டு. ஆகையால் இவருக்கு வேலை அதிகம் இல்லை.

கண்ணப்பன் :— இவர்களை எல்லாம் யார் ஏற்படுத்தினுர்கள் ?

தகப்பனுர் :— இவர்களெல்லாம் நமது இந்திய அரசாங்கத்தின் கீழ், தபால் இலாகாவில்

வேலை செய்கிறார்கள். நமது இந்திய அரசாங்கம் நமக்குச் செய்யும் நன்மைகளில் தபால் ஆபீசுகளை நடத்துவதும் ஒன்று.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கடிதம் | கவர் | சிரமம் | முழுவதும் |
| ஆபீசு | விலாசம் | கார்டு | சம்பளம் |
| தபால்காரர் | இலாகா | பட்டினம் | ஆகையால் |
| ஏற்படுத்து | அதனால் | தெரிந்து | அரசாங்கம் |

### பயிற்சி

1. விடை எழுது :—
    1. எந்த வீட்டுக்கு எந்தக் கடிதம் கொடுக்க வேண்டுமென்று தபால்காரர் எப்படித் தெரிந்துகொள்கிறார் ?
    2. தபால்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது ?
    3. தபால் இலாகா யாரால் நடத்தப்படுகிறது ?
2. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—
    1. தபால் ஆபீசில் ——— கொடுத்து கார்டு வாங்குகிறோம்.
    2. தபால் இலாகாவை நமது இந்திய ——— நடத்துகிறார்கள்.

# 24. படப் பயிற்சி—3

## [சிங்கமும் சுண்டெலியும்]

பின்வரும் படங்களை வரிசையாகப் பார்த்துக் கதையைச் சொல்லு :—



## 25. அறிவுள்ள காகம்

வெயில் காலத்தில் ஒரு நாள் ஒரு காகம் தண்ணீர் குடிக்க விரும்பியது. எனவே அது அங்கும் இங்கும் அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை.



கடைசியில் ஓர் இடத்தில் தண்ணீர்க் குடம் ஒன்றைப் பார்த்தது. உடனே குடத்தின் மேல் உட்கார்ந்தது. ஆனால் குடத்தில் கொஞ்சம் தண்ணீர்தான் இருந்தது. அது காகத்திற்கு எட்டவில்லை.

காகம் 'என்ன செய்யலாம்' என்று எண்ணிப் பார்த்தது. பிறகு கீழே கிடந்த சிறு கல் ஒன்றைத் தன் அலகால் பொறுக்கியது. அதைக் கொண்டு வந்து தண்ணீர்க் குடத்தில் போட்டது. இப்படியே ஒவ்வொன்றாகப் பல கற்களைப் போட்டது. குடத்தில் இருந்த தண்ணீர் சிறிது சிறிதாக மேலே வந்தது.

கடைசியில் குடத்தில் இருந்த தண்ணீர் காகத்திற்கு எட்டியது. காகமும் வயிறு நிறையத் தண்ணீர் குடித்தது. அதன் விருப்பம் நிறைவேறியது. பின்பு அது மகிழ்ச்சியோடு பறந்து சென்றது.

### புதுச் சொற்கள்

அலகு எட்ட நிறைய கடைசி அடங்கியது
வயிறு அறிவு கிடைக்க பொறுக்கு ஒவ்வொன்ருக

### பயிற்சி

1. விடை எழுது :—
    1. காகம் எதற்காக அங்குமிங்கும் அலேந்தது ?
    2. குடத்தில் எவ்வளவு தண்ணீர் இருந்தது ?
    3. காகம் குடத்தில் என்ன போட்டது ?
    4. குடத்திலிருந்த தண்ணீர் எப்பொழுது மேலே வந்தது?
2. கீழே உள்ள சொற்களேச் சரியானபடி மாற்றி வாக்கியங்களாக அமை :—
    1. விருப்பம் காகத்தின் நிறைவேறியது.
    2. கற்களே போட்டது குடத்தில் காகம்.
    3. எட்டவில்லே குடத்தில் காகத்திற்கு தண்ணீர் இருந்த.

---

## 26. பள்ளிக்கூடத் தோட்டம்

இது எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம்.



முதலில் நாங்கள் நிலத்தை நன்ருய்க் கொத்தினேம். பிறகு உரம் போட்டோம். பாத்திகள் கட்டினேம். விதைகள் விதைத்தோம். சில செடிகளே நட்டோம். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து, பாத்திகளுக்குப் பாய்ச்சினேம். செடி, கொடி முதலியன முளேத்துத் தழைத்தன.

இது கீரைப் பாத்தி. பாத்தியில் கீரை விதைகளேத் தெளிக்க வேண்டும். விதைகள் முளேத்துச் சிறு கீரைச் செடிகள் வளரும். இளங் கீரை

யைச் சமைத்துச் சாப்பிடலாம். உடல் நலத்துக்கு இது மிகவும் நல்லது.



இது கத்திரிச் செடி. செடியில் கத்திரிக்காய்களைப் பார். கத்திரிச் செடிகள் அதிக உயரம் வளரா: வெண்டை, மிளகாய், கொத்தவரை முதலிய பல காய் கறிச் செடிகளும் இங்கே இருக்கின்றன.

இது அவரைக் கொடி. அவரைக் கொடி உயரப் படரும். சுரை, புடல், பீர்க்கு முதலிய கொடிகளும் உயரப் படரும். பறங்கிக் கொடி தரை மேல் படரும். பூசணி, பாகல் முதலிய கொடிகளும் தரைமேல் படரும். இந்தக் காய்களைக் கறி சமைத்துச் சாப்பிடுகிறோம்.



நீங்கள் ரோசாப் பூவைப் பார்த்திருப்பீர்கள். ரோசாப்பூ அழகானது. நல்ல வாசனையும் உள்ளது. மல்லிகை, சாமந்தி, அரளி முதலிய பூச் செடிகளும் இங்கே இருக்கின்றன. முல்லை, சம்பங்கி முதலிய மலர்க் கொடிகளும் இருக்கின்றன.

இது ஒரு வாழை. இதற்கு விதை கிடையாது. வாழைக் கன்றை நட வேண்டும்.

வாழைக்குக் கிளைகள் இல்லை. இதன் இலை



பெரியது. இலையில் உணவு வைத்துக் கொண்டு புசிக்கலாம். வாழையில் ஒரு குலைதான் உண்டாகும். குலையில் காய்கள் இருக்கின்றன. வாழைப்பூவைப் பார். வாழைப்பூ, தண்டு, காய் இவைகளைக் கறி சமைக்கலாம். வாழைப் பழம் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது. எங்கள் தோட்டம் மிகவும் செழிப்பாய் இருக்கிறது.

## புதுச் சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| முளை | நடவு | உரம் | சமை | அவரை |
| புடல் | உடல் | நலம் | அரளி | தழைத்து |
| பீர்க்கு | பூசணி | படர் | செழிப்பு | கிடையாது |
| பாகல் | சுரை | முல்லை | பாய்ச்சு | சம்பங்கி |
| தோட்டம் | தெளி | கறி | தண்டு | கொத்தவரை |

## பயிற்சி

1. விடை எழுது :—
   1. கீரை எதற்கு நல்லது ?
   2. தோட்டத்தில் வளரும் காய்கறிச் செடிகளில் நான்கு சொல்லு.
   3. வாழையின் எந்தப் பாகங்களைச் சமைத்து உண்ணலாம் ?
2. பொருத்தமாகச் சேர்த்து எழுது :—

| | |
|---|---|
| அவரைக் கொடிக்கு | நல்ல வாசனை உண்டு. |
| ரோசாப் பூவுக்கு | கிளைகள் இல்லை. |
| வாழைக்கு | பந்தல் போடவேண்டும். |

TB
031(1)
N60

# 27. வெண்ணிலா



அந்தரத்திலே யுலாவும் வெண்ணிலாவே—உன்னை
ஆக்கினவர் யாரோ சொல்லாய் வெண்ணிலாவே. 1

ஆனந்தமாய் ஆடிவரும் வெண்ணிலாவே—உன்
அன்புடையார் யாரோ சொல்லாய் வெண்ணிலாவே. 2

இவ்வுலகில் நன்னிலவை வெண்ணிலாவே—நீ
எங்கிருந்து பெற்றளிப்பாய் வெண்ணிலாவே. 3

ஈசன்உனைச் சடையில் வைத்தான் வெண்ணிலாவே-எங்கும்
இன்பநிலாத் தந்திடவே வெண்ணிலாவே. 4

உலகமெலாம் சூழ்ந்துவரும் வெண்ணிலாவே—உனக்கு
உடம்பெல்லாம் வெள்ளிமயம் வெண்ணிலாவே. 5

ஊக்கமுற மாலைவரும் வெண்ணிலாவே—உன்போல்
ஊக்கமுற என்னைச் செய்வாய் வெண்ணிலாவே. 6

எங்கள் மனம் இன்பமுற வெண்ணிலாவே—நீ
எங்கு வித்தை கற்று வந்தாய் வெண்ணிலாவே. 7

ஏழைகளின் நல்விளக்காம் வெண்ணிலாவே—இன்னும்
எங்கெல்லாம் நீ போய்வருவாய் வெண்ணிலாவே. 8

86569

ஐயமின்றி உன்னலன்றோ வெண்ணிலாவே—நாங்கள்
ஆனந்தமாய்க் கூத்தாடுவோம் வெண்ணிலாவே. 9

ஒத்தபொருள் உன்னழகை வெண்ணிலாவே—இந்த
உலகினில் இல்லை அன்றோ வெண்ணிலாவே. 10

ஓகோ நீ நாளுக்கு நாள் வெண்ணிலாவே—உன்
உடம்பேனோ இளைக்கின்றாய் வெண்ணிலாவே. 11

ஒளவையாரோ அழகுமானோ வெண்ணிலாவே—உன்னை
அண்டிமறைந் துள்ளிருப்பார் வெண்ணிலாவே. 12

அருஞ்சொற்பொருள்

அந்தரம் - ஆகாயம். ஈசன் - சிவபெருமான். வித்தை - தந்திரம், கல்வி. ஐயம் - சந்தேகம். அண்டி - நெருங்கி.

பயிற்சி

1. நிலாவின் உடம்பு இளைக்கிறது என்பதன் பொருள் என்ன?
2. நிலாவில் ஒளவையாரோ மானோ இருப்பதாகச் சொல்லியிருப்பது எதைக் குறிக்கிறது?

# 28. சுத்தம் சோறு போடும்



தாய் :— மணியா! நீ பள்ளிக்கூடம் போகும் நேரம் ஆகவில்லையா? இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிருயே!

மகன் :— அம்மா, கொஞ்ச நேரம் கழித்துப் போகலாம்.

தாய் :— இந்த உடையைப் போட்டுக் கொண்டா பள்ளிக்கூடம் போகப் போகிருய்?

மகன் :— ஆம், அம்மா! எனக்கு வேறு உடை இல்லையே!

தாய் :— இது ஏன் இவ்வளவு அழுக்காய் இருக்கிறது?

மகன் :— அம்மா! நான் விளையாடும்போது ஒரு பையன் சண்டைக்கு வந்தான். அவனேடு சண்டை செய்த பொழுது மண்ணில் விழுந்து புரண் டேன். அதனுல் உடை அழுக்காகி விட்டது.

**தாய் :—** இந்த வெயில் நேரத்தில் விளையாடுவது உடம்புக்குக் கெடுதல் செய்யும்; படிக்கும் பிள்ளைகளுக்கு ஏற்றதும் இல்லை. விளையாடும்போது புழுதியில் புரள்வதும், பிற பிள்ளைகளோடு சண்டை செய்வதும் உனக்குத் தக்க செயல்கள் அல்ல.

**மகன் :—** விளையாடும்போது புழுதிபடாதா ?

**தாய் :—** கை கால் எல்லாம் புழுதியாய் விட்டதே! உடை மிகவும் அழுக்காக இருக்கிறது. இப்பொழுது அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டுமென்கிறாய்.

**மகன் :—** எப்படியாவது பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டுமே, அம்மா !

**தாய் :—** பள்ளிக்கூடத்துக்கு இப்படியே போகலாமா ? ஆசிரியர் உன் உடம்பையும் உடையையும் பார்த்து ஒன்றும் சொல்ல மாட்டாரா ?

**மகன் :—** அம்மா! நேற்றுக்கூடக் கோபித்துக் கொண்டார். 'இனிமேல் இப்படி வராதே' என்றார்.

**தாய் :—** பார்த்தாயா! உன் ஆசிரியர் கோபித்துக் கொண்டும் நீ மறுபடியும் புழுதியில் போய் விளையாடினாயே ! கை கால்களில் உள்ள புழுதியைத் தேய்த்துக் கழுவாமல் நீ சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் அடிக்கடி நோய் வரும். இந்த மாதிரி உடையைக் கட்டிக் கொள்வது நோய்க்கு இடம் கொடுப்பதாகும். இதனால் தான் உனக்கு அடிக்கடி தலைவலி, காய்ச்சல் முதலிய நோய்கள் வருகின்றன.

மகன் :— அப்படியானால் எனக்கு இன்று சாப்பாடு இல்லையா, அம்மா ?

தாய் :— சுத்தமாய் இருந்தால் தான் சாப்பாடு கிடைக்கும். ஆகையால் நீ இப்பொழுதே போய், குளிர்ந்த நீரில் நன்ருய்த் தேய்த்துக் குளித்துவிட்டு வா. வேறு நல்ல உடை தருகிறேன். உடுத்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போகலாம்.

மகன் :— அம்மா ! இனிமேல் தக்கபடி நடந்து கொள்ளுகிறேன். ஆசிரியர் கோபித்ததையும் தாங்கள் சொன்னதையும் மறக்கவேமாட்டேன்.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| உடை | நேரம் | மறுபடியும் | நோய் |
| தக்க | புழுதி | உடுத்து | புரண்டேன் |
| பொறுத்து | அடிக்கடி | காய்ச்சல் | மறக்க |
| மாட்டேன் | சண்டை | குளிர்ந்த | ஏற்றது |
| அவசரம் | இல்லை | இனிமேல் | கழுவு |
| | வேறு | தலைவலி | |

### பயிற்சி

1. விடை எழுது :—
   1. மகனுடைய உடையும் உடம்பும் ஏன் அழுக்காகி விட்டன ?
   2. உடலை அழுக்காக வைத்திருப்பது ஏன் கெடுதல் ?
2. பின்வரும் சொற்களைச் சரியானபடி மாற்றி அமைத்து வாக்கியமாக்கு :—
   1. நோய் உண்டாகும் உடல் இருந்தால் அழுக்காக.
   2. இருந்தால்தான் கிடைக்கும் சாப்பாடு சுத்தமாக.

# 29. பாரதியாரின் நூலார்வம்

சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களில் சில வற்றை நீங்கள் படித்திருக்கிறீர்கள். பாரதியார் ஒரு மகாகவி. அவர் பாடிய தேசீயப் பாடல்கள் தமிழ் மக்களின் நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றை யும் வளர்த்தன.

பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் சிறிது காலம் எட்டயபுரம் சமீன்தாருடைய சபையில் புலவராயிருந் தார். அப்பொழுது ஒரு நாள் சமீன்தார் பாரதி யாரையும் வேறு சிலரை யும் அழைத்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட் டார். எல்லோரும் இரண்டு வாரங்கள் சென்னையில் தங்கினார் கள்.



சமீன்தார் பாரதியா ருக்கும் தம்முடன் வந்த பிறருக்கும் செலவுக்காக நூற்றுக் கணக்கான ரூபாய்கள் கொடுத்தார். பாரதி யாருக்கு ஐந்நூறு ரூபாய் கிடைத்தது. எல்லோரும் தமக்கும் தம் குடும்பத்துக்கும் வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டார்கள். பிறகு எட்டயபுரத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

பாரதியார் தம் வீட்டுக்குச் சென்றார். அவ ருடைய மனைவி அவரை ஆவலுடன் வரவேற்றாள். பாரதியார் வாங்கிவந்த சாமான் மூட்டைகள் பிரிக்கப்

பட்டன. எல்லாம் புத்தகங்கள்! கம்பராமாயணம், திருக்குறள், புறநானூறு, அகநானூறு முதலிய தமிழ் நூல்களும் பல ஆங்கில நூல்களும் மூட்டை களிலிருந்து வெளிப்பட்டன. அவர் தம் மனைவிக்கு ஒரு சேலை மட்டும் வாங்கி வந்திருந்தார்.

சமீன்தார் கொடுத்த பணத்தில் பெரும் பாகத் தைப் புத்தகங்கள் வாங்குவதில் செலவழித்து விட் டார் பாரதியார். நூல்களைப் படிப்பதில் அவருக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தது என்று எண்ணிப் பாருங்கள்!

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கவி | ஆவல் | ஆர்வம் | பாரதி |
| மொழி | பாடல் | மக்கள் | சபை |
| புலவர் | அழைத்து | புறப்படு | தங்கி |
| செலவு | சமீன் | மனைவி | திரும்பி |
| பற்று | சேலை | எவ்வளவு | மகா |
| | வரவேற்று | | |

### பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களைச் சேர்த்துப் படி.
   1. பாரதியாரின் தேசீயப் பாடல்கள் தமிழ் மக்களின்——— உம் ——— உம் வளர்த்தன.
   2. பாரதியார் சிறிது காலம் எட்டயபுரம் சமீன்தாருடைய ——— புலவராக இருந்தார்.
2. 1. சென்னைக்குச் சென்ற பொழுது சமீன்தார் கொடுத்த பணத்தைப் பாரதியார் என்ன செய்தார்?
   2. புத்தகங்களைப் படிப்பதில் பாரதியாருக்கு இருந்த ஆவல் எப்படி வெளிப்பட்டது?

# 30. புறுவும் எறும்பும்

ஒரு குளக்கரையில் மரம் ஒன்று இருந்தது. அதில் ஒரு புறு கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அந்த மரத்தின் கீழே ஓர் எறும்புப் புற்று இருந்தது. அதில் சில கட்டெறும்புகள் வசித்து வந்தன.

ஒரு நாள் அந்த எறும்புகள் குளக்கரை ஓரத்தில் இரை தேடிக் கொண்டிருந்தன. அப்பொழுது பலமான காற்று அடித்தது. ஓர் எறும்பு தண்ணீரில் தவறி விழுந்தது. அது தண்ணீரில் நீந்த முடியாமல் தத்தளித்தது.

மரத்தில் இருந்த புறு இதைப் பார்த்தது. உடனே ஓர் இலையைப் பறித்து, எறும்பின் அருகில் கொண்டு போய்ப் போட்டது. இலை தண்ணீரின்மேல் மிதந்தது. எறும்பு மெதுவாய் அதில் ஏறிக்கொண்டது. சிறிது நேரத்தில் அந்த இலை எறும்போடு கரையை அடைந்தது. எறும்பும் உயிர் தப்பிக் கரை சேர்ந்தது.



சிறிது நேரத்தில் அங்கு ஒரு வேடன் வந்தான். அழகான அந்தப் புறுவைப் பார்த்தான். உடனே தன் வில்லை எடுத்தான். புறுவின் மேல் அம்பு எய்யக் குறிவைத்தான்.

மரத்தடியில் இருந்த எறும்பு இதைப் பார்த்தது.



புருவைக் காப்பாற்ற எண்ணியது. உடனே ஓடி வேடன் காலைச் 'சுரீர்' என்று கடித்தது. வேடனும் 'ஐயோ' என்று அலறினன். இந்தச் சத்தத்தைக்கேட்ட புரு பறந்து ஓடித் தப்பியது.

புரு எறும்புக்குச் செய்த உதவி வீண்போகவில்லை. எறும்பைப் புரு காப்பாற்றியது. புருவை எறும்பும் காப்பாற்றியது. ஆகையால், உதவி வீண் போகாது.

### புதுச் சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மித | குறி | சேர் | பறி | ஓரம் | காப்பாற்ற |
| கரை | சத்தம் | ஐயோ | வில் | தேடு | வீண்போக |
| எய்ய | தவறி | தப்பி | அம்பு | புற்று | அடைந்து |
| சுரீர் | வேடன் | தத்தளி | | | |

### பயிற்சி

1. விடை எழுது :—
   1. எறும்பு ஏன் தண்ணீரில் விழுந்தது ?
   2. புரு எப்படி எறும்புக்கு உதவி செய்தது ?
   3. எறும்பு புருவுக்கு எப்படி உதவி செய்தது ?
2. தவருன வாக்கியங்களைத் திருத்தி எழுது :—
   1. புரு இலையைப் பறித்துப் போட்டன.
   2. எறும்புகள் கரையில் இருந்தது.
   3. வேடன் ஐயோ என்று அலறியது.

# 31. கிராம அதிகாரிகள்



**கண்ணன் :—** மாமா! இன்று காலையில் கிராமத்துக்குப் போய்வருவோம் என்றீர்களே. இப்போது போகலாமா?

**மாமன் :—** அப்பா! உன் தகப்பனரிடம் கேட்டாயா? அவர் போகச்சொன்னல் நீ வரலாம்.

**கண்ணன் :—** மாமா! நான் கேட்டேன். 'போய் வா' என்ருர்.

**மாமன் :—** அப்படியானல் சரி! போகலாம் வா. உன்னல் அதிக தூரம் நடக்க முடியாது. வண்டியிலே போவோம். கிராமத்துக்கு அருகிலே போய் இறங்கி நடந்து போவோம்.

**கண்ணன் :—** அப்படியே செய்வோம் மாமா! இரண்டு பக்கங்களிலும் பார்த்துக்கொண்டே மெல்லப் போகவேண்டும்.

**மாமன் :—** இதோ கிராமத்துக்கு அருகிலே வந்துவிட்டோம். தோட்டங்களும் வயல்களும் வழி யெல்லாம் இருப்பதைப் பார்.

**கண்ணன் :—** மாமா! வயல் நடுவிலே ஒருவர் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு போகிறுர். அதோ இன்னெருவர் தடியைக் கையில் வைத்துக்கொண்டு அவருக்கு உதவி செய்கிறுர். இவர்கள் யார்? இவர் கள் என்ன செய்கிறுர்கள்?

**மாமன் :—**கண்ணு! சங்கிலி வைத்துக் கொண்டு அளப்பவர் தான் இந்தக் கிராமத்துக் கணக்கப் பிள்ளை. அவரைக் 'கர்ணம்' என்றும் சொல்வ துண்டு. அவருடன் இருப்பவர் தண்டல்காரர். இவர் கள் இங்கே நிலங்களை அளக்கிறுர்கள்.

**கண்ணன் :—** மாமா! இவர்களுக்கு வேறு வேலை உண்டா? இவ்வளவுதானு?

**மாமன் :—** கணக்கப்பிள்ளை நாம் பயிர் செய்யும் நிலங்களை அளந்து பார்ப்பார். நம் நிலத்தில் என்ன தானியம் பயிர் செய்கிறுேம் என்று எழுதி வைப்பார். நாம் அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய வரிப் பணம் இவ்வளவு என்று எழுதி, கிராம மணியக்கார ருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். தண்டல் காரர் கணக்கப்பிள்ளைக்கு உதவியாக அவர் சொன்ன வேலைகளைச் செய்வார்.

**கண்ணன் :—** மாமா! மணியக்காரர் என்று சொன்னீர்களே, அவருக்குக் கிராமத்தில் என்ன வேலை?

**மாமன் :—** கண்ணு! நாம் கிராமத்துக்குள் போகும்போது அவரைப் பார்ப்போம். அப்போது அவரைப்பற்றிச் சொல்கிறேன்.

**கண்ணன் :—** மாமா! இதோ கிராமத்துக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கிணறு இருக்கிறதே! நம் ஊரில் இவ்வளவு பெரிய கிணறு கிடையாதே! இதில் மக்கள் தண்ணீர் எடுக்கிருர்கள்.

மாமன் :— இதுதான் கிராமக் கிணறு. கிராமத்து மக்கள் எல்லோரும் இதிலிருந்துதான் நீர் இறைத்துச் செல்வார்கள்.

**கண்ணன் :—** அதோ ஒரு சிறு வீடு தனியாய் இருக்கிறதே! திண்ணையிலும், வெளியிலும் மக்கள் கூட்டமாக இருக்கிருர்கள். ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கிருர். திண்ணைப் பக்கத்தில் இரண்டு பேர் நிற்கிருர்கள்.

மாமன் :— கண்ணு! இதுதான் கிராமச் சாவடி. உட்கார்ந்து இருப்பவர்தான் இவ்வூர் கிராம அதிகாரி. இவரைக் கிராம முன்சீப் அல்லது மணியக் காரர் என்று சொல்லுவார்கள். இவர் இப்போது கிராம மக்களுக்குள் ஏற்பட்ட ஒரு வழக்கை விசாரிக் கிருர். வெளியே தடியோடு நிற்பவர் தலையாரி.

**கண்ணன் :—** இவர்களுக்கு இன்னும் என்ன வேலை உண்டு?

மாமன் :— கிராம அதிகாரி, கிராமத்தில் பிறக் கும் குழந்தைகளின் கணக்கு எழுதுவார். இறந்த வர்கள் பெயர்களையும் பதிவுசெய்வார். நிலத் தீர்வை யை வசூல் செய்வார்.

**கண்ணன் :—** தலையாரிக்கு என்ன வேலை?

மாமன் :—மணியக்காரர் சொல்லும் வேலையைத் தலையாரி செய்வார். இரவில் ஊரைக் காவல் செய் வார்.

**கண்ணன் :—** மாமா! இந்தக் கிராமத்தில் இன்று தங்கிவிட்டு, நாளைக்கு நம் ஊருக்குப் போகலாமா?

**மாமன் :—** அப்படியே செய்யலாம்.

### புதுச் சொற்கள்

| | | |
|---|---|---|
| சாவடி | தீர்வை | பதிவு செய் |
| வழக்கு | தானியம் | தலையாரி |
| தனியாய் | வசூல் | அளப்பவர் |
| பிறக்கும் | விசாரி | குழந்தை |
| முன்சீப் | பயிர் | மணியக்காரர் |
| கிராம | அதிகாரி | தண்டல்காரர் |
| வரிப்பணம் | இறங்கி | கணக்கப்பிள்ளை |
| | கர்ணம் | |

### பயிற்சி

1. **விடை எழுது :—**
   1. கணக்கப்பிள்ளையின் வேலைகள் என்ன?
   2. தண்டல்காரர் கணக்கப்பிள்ளைக்கு எப்படி உதவி செய்வார்?
   3. கிராம முன்சீப்பின் வேலைகளைச் சொல்லு.
2. **பொருத்தமான சொற்களை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்து முதல் வரிசைச் சொற்களுடன் சேர் :—**

| | |
|---|---|
| மணியக்காரர் | ஊர்க்காவல் |
| கணக்கப்பிள்ளை | வழக்கு விசாரணை |
| தலையாரி | வரிக்கணக்கு எழுதுதல் |

# 32. வேடிக்கைப் பாடல்கள்

1. தண்ணீர் வைப்பது பானை
சண்டை செய்வது சேனை
பால் குடிக்கும் பூனை
மன்னர் ஏறுவது யானை

2. படுக்க உதவும் பாய்
பழுக்கா திருப்பது காய்
வீட்டைக் காப்பது நாய்
வேண்டும் தெய்வம் தாய்

3. கிழமையில் கூடும் சந்தை
கிழிசல் துணியே கந்தை
மாடுகள் கூட்டம் மந்தை
மறவாத் தெய்வம் தந்தை

4. கழனி உழுவது நெல்லுக்கு
காக்கை ஓடும் கல்லுக்கு
மூக்கில் அணிவது புல்லக்கு
மூத்தோர் ஏறுவர் பல்லக்கு

5. ஆடித் திரியும் மயில்
பாடித் திரியும் குயில்
அடித்துக் காயும் வெயில்
படித்துப் பாடம் பயில்.

# 33. ஔவையார்

ஔவையார் பண்டைத் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த ஒரு பெரும் புலவர். அரசர்களும் இவரை மரியாதையுடனும் அன்புடனும் நடத்தினுர்கள். அரசர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளில் இவரே பல தடவைகள் சமாதானம் செய்திருக்கிருர். ஒரு சமயம் அதியமான் என்னும் அரசனுக்கு ஓர் அரிய நெல்லிக் கனி கிடைத்தது. அதைத் தின்றவர் நெடுநாள் உயிரோடிருக்கலாம். அந்தக் கனியை அதியமான் தானே உண்ணுமல் ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையாரும் அதை உண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தார்.

ஒரு கிராமத்தில் ஒரு வீட்டின் கொல்லையில் ஒரு பலா மரம் இருந்தது. அதைச் சிலர் வெட்டினர். அந்த மரத்திற்குச் சொந்தக்காரியான ஏழைப் பெண் அழுதுகொண்டிருந்தாள். ஔவையார் இதைக் கண்டு வருந்தி ஒரு பாட்டுப் பாடினுர். மரம் தளிர்த்து வளர்ந்து ஓங்கி நின்றது.

ஒரு நாள் ஔவையார் மிகுந்த பசியோடிருந்தார். அவரது பசியாற ஒரு வேளாளன் கஞ்சி வார்த்தான். அவனுடைய வறுமை தீரும்படி ஔவையார் ஒரு பாட்டுப் பாடினுர். அவன் பெருஞ் செல்வம் பெற்று நெடுங்காலம் வாழ்ந்தான்.

ஒரு சமயம் ஔவையார் குளிரால் மிகவும் துன்புற்ருர். ஒரு கொல்லர் தம் உலையின் பக்கமாய் ஔவையாரை உட்காரச்செய்து குளிரைப் போக்கி, அவருக்கு வேண்டிய உதவிகள் செய்தார். சில நாட்

களில் கடல் கரைபுரண்டு வந்து அந்த ஊரை அழிக்கத் தொடங்கியது. ஔவையார் அக்கொல்லருடைய வீடும் உலேயும் அழியாதிருக்கப் பாடினர். அப்படியே அவ்விரண்டும் அழியாமல் தப்பின.

இப்படியே பல அருட் செயல்களை ஔவையார் இவ்வுலகத்தில் செய்து புகழ் பெற்றார். ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய பல அரிய நூல்களும் செய்துள்ளார்.

## புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அழிக்க | புகழ் | அரீய | ஏழை |
| நெல்லி | உலகம் | கனி | கடல் |
| சொந்த | சச்சரவு | கஞ்சி | போக்கி |
| செல்வம் | கொல்லர் | உலே | வருந்தி |
| வறுமை | அருட்செயல் | அரசர் | வார்த்து |
| நெடுநாள் | சமாதானம் | சில | தளிர்த்து |
| தடவை | வேளாளன் | ஓங்கி | கொல்லே |

## பயிற்சி

1. ஔவையார் நெடுங்காலம் உயிரோடிருந்ததற்குக் காரணம் என்ன?
2. ஔவையார் ஏழைப் பெண்ணுக்கு என்ன செய்தார்?
3. ஔவையாருக்குக் கஞ்சி வார்த்த வேளாளனுக்கு என்ன கிடைத்தது?
4. ஔவையாருக்கு உதவிய கொல்லர் என்ன நன்மை பெற்றார்?

# 34. நான்கு திருடர்கள்



ஒருநாள் இரவில் நான்கு திருடர்கள் ஒரு கிழவியின் வீட்டில் திருடச் சென்றுர்கள். ஆனுல் கிழவியின் வீட்டுக்குள் அவர்களால் நுழைய முடியவில்லை. அவர்கள் பல தந்திரங்களைச் செய்தும் பயனில்லாது போய்விட்டது. கடைசியாக ஒரு திருடன் கிழவியின் எருமை ஒன்றை அவிழ்த்துவிட்டான். எருமையின் கதறலைக் கேட்டுக் கிழவி விழித்துக் கொண்டாள்; வெளியே வந்து பார்த்தாள். உடனே திருடர்கள் அவளைப் பிடித்து ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டினுர்கள். தங்கள் ஆயுதங்களை மரத்தினடியில் வைத்துவிட்டு அவர்கள் வீட்டுக்குள் சென்றுர்கள்.

திருடர்கள், இரவு முழுவதும் கிழவியின் வீட்டிலிருந்த சொத்துக்களைச் சுமந்து சென்று ஓரிடத்தில்

மறைத்து வைத்தார்கள். காலையில் அவரவர் வீட்டுக்குச் சென்று களைப்பினால் உறங்கிவிட்டார்கள். மரத்தினடியில் போட்ட ஆயுதங்களை எடுத்துச்செல்ல மறந்து போனார்கள்.

மறுநாள் போலீசுக்காரர்கள் அவ்வழியே வந்தார்கள்; செய்தியை அறிந்தார்கள்; கிழவியை அவிழ்த்து விட்டார்கள். மரத்தினடியில் கிடந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு ஊராரிடம் துப்புவிசாரித்து, அந்த நான்கு திருடர்களையும் பிடித்தார்கள். திருடர்கள் நீதிபதியின் முன்னே நிறுத்தப்பட்டார்கள்.

நீதிபதி திருடர்களை விசாரணை செய்தார். ஆனால் அவர்கள் தங்களுடைய குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் திருடியதைப் பார்த்தவர்களும் இல்லை. ஆகையால், அவர்களைத் தண்டிக்க முடியவில்லை.

கடைசியில் நீதிபதி ஒரு தந்திரம் செய்தார். திருடர்களுடைய ஆயுதங்களைக் கச்சேரி வாயிலில் போட்டுவைக்கும்படி போலீசுக்காரருக்கு அவர் ரகசியமாக உத்தரவிட்டார். பிறகு திருடர்களைப் பார்த்து, "நீங்கள் குற்றமில்லாதவர்கள்; உங்களை விடுதலை செய்கிறேன்," என்று கூறினார்.

திருடர்கள் மகிழ்ச்சியுடன் கச்சேரியை விட்டு வெளியே வந்தார்கள். வாயிலில் தங்களுடைய ஆயுதங்கள் இருந்ததைக் கண்டார்கள். சுற்று முற்றும் யாரும் இல்லை. உடனே ஒவ்வொருவரும் தம் தம் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். இதை

மறைவிலிருந்து பார்த்த போலீசுக்காரர்கள், உடனே அவர்கள் மேல் பாய்ந்து பிடித்தார்கள்; அவர்களை மறுபடியும் நீதிபதியிடம் அழைத்துச் சென்றார்கள்.

நீதிபதி, திருடர்களைப் பார்த்து, "இந்த ஆயுதங்கள் கிழவியின் வீட்டு மரத்தினடியில் கிடந்தவை. இவை உங்களுடைய ஆயுதங்கள் என்பதை நீங்கள் காட்டிவிட்டீர்கள். ஆகையால் நீங்களே திருடர்கள்," என்று கூறினர். திருடர்கள் தலைகுனிந்து உண்மையை ஒப்புக் கொண்டார்கள். இரண்டு ஆண்டுக் காலம் அவர்கள் சிறைவாசம் செய்யவேண்டுமென்று நீதிபதி தீர்ப்பளித்தார். கிழவியின் சொத்துக்கள் அவளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

### புதுச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| கிழவி | உறங்கி | தண்டிக்க | கச்சேரி |
| தந்திரம் | தீர்ப்பு | ரகசியமாக | நீதிபதி |
| ஒப்பு | களைப்பு | சிறைவாசம் | தலைகுனி |
| விடுதலை | சொத்து | விசாரணை | வாயில் |
| போலீசு | கூறினர் | கிடந்தவை | திருடர் |
| குற்றம் | நுழைய | அவிழ்த்து | திருப்பி |
| மறுநாள் | கைப்பற்றி | ஆயுதங்கள் | பயன் |

### பயிற்சி

1. கிழவியின் வீட்டில் நுழைய ஒரு திருடன் என்ன தந்திரம் செய்தான்?
2. திருடர்கள் திருடிய பிறகு என்ன தவறு செய்தார்கள்?
3. முதலில் நீதிபதி திருடர்களை ஏன் தண்டிக்கவில்லை?
4. நீதிபதி என்ன தந்திரம் செய்தார்?

# 35. உலகநீதி

1. ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
3. மாதாவை யொருநாளும் மறக்கவேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச்சொல்லவேண்டாம்.
6. நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்.
7. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
8. அடுத்தவரை யொருநாளும்கெடுக்கவேண்டாம்.
9. மனம்போன போக்கெல்லாம்போகவேண்டாம்.
10. தனம்தேடி யுண்ணமற் புதைக்கவேண்டாம்.
11. தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
12. சினந்தேடி அல்லலையும் தேடவேண்டாம்.
13. குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்.
14. கொலைகளவு செய்வாரோ டிணங்கவேண்டாம்.
15. கற்றவரை ஒரு நாளும் பழிக்கவேண்டாம்.
16. கோயிலில்லா வூரிற் குடியிருக்க வேண்டாம்.
17. வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீளவேண்டாம்.
18. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
19. மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.
20. மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
21. முன்கோபக் காரரோ டிணங்கவேண்டாம்.
22. வழிப்பறித்துத் திரிவாரோ டிணங்கவேண்டாம்.
23. கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்.
24. எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்.
25. சேராத விடந்தனிலே சேரவேண்டாம்.
26. செய்நன்றி யொருநாளும் மறக்கவேண்டாம்.
27. ஊரோடுங் குண்டுணியாய்த் திரியவேண்டாம்.
28. உற்றாரை உதாசினங்கள் சொல்லவேண்டாம்.

29. மண்ணின்றுமண்ணோரஞ் சொல்லவேண்டாம்.
30. காணுதவார்த்தையைக்கட்டுரைக்கவேண்டாம்.
31. புண்படவே வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்.
32. புறஞ்சொல்லித்திரிவாரோடிணங்கவேண்டாம்.
33. மறம்பேசித் திரிவாரோ டிணங்கவேண்டாம்.
34. வாதாடி வழக்கழிவு சொல்லவேண்டாம்.
35. திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்.
36. தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
37. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
38. கூருக்கி ஒருகுடியைக் கெடுக்கவேண்டாம்.
39. வீருன தெய்வத்தை இகழவேண்டாம்.
40. வெற்றியுள்ள பெரியோரை வெறுக்கவேண்டாம்.

---

## 36. கொன்றைவேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
6. ஏவா மக்கள் மூவா மருந்து.
7. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
8. கிட்டா தாயின் வெட்டென மற.
9. கீழோ ராயினும் தாழ வுரை.
10. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
11. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.
12. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
13. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
14. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.

15. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
16. சூதும் வாதும் வேதனை செய்யும்.
17. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
18. தந்தைசொல் மிக்க மந்திர மில்லை.
19. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.
20. திரைகட லோடியும் திரவியந் தேடு.
21. தேடா தழிக்கின் பாடாய் முடியும்.
22. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
23. தோழ னேடும் ஏழமை பேசேல்.
24. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
25. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
26. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.
27. நெஞ்சை யொளித்தொரு வஞ்சகம் இல்லை.
28. நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
29. புலையும் கொலையும் களவும் தவிர்.
30. பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்.
31. போனகம் என்பது தானுழந் துண்டல்.
32. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.
33. மாரி யல்லது காரிய மில்லை.
34. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
35. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
36. மேழிச் செல்வம் கோழை படாது.
37. வளவ னாயினும் அளவறிந் தழித்துண்.
38. ஊக்க முடைமை ஆக்கத்திற்கு அழகு.
39. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.
40. ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.

---

86569
TB
031 (2)
N60

*Approved by the Text-Book Committee, Madras.*
*Vide Fort St. George Gazette Supplement to Part I—B.*
*Page 6 dated 28—5—58.*

---

*Used 32 lbs. Double Demy white printing*

---


வி. சூ. சுவாமிநாதன்

பிரசுரகர்த்தர்

மேலக்கோபுரத் தெரு, சுங்குராமசெட்டி தெரு,

மதுரை :: சென்னை-1


---

பதிப்புரிமை] [விலை 44 ந. பை.